This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# ஊஞ்சல்

www.writersujatha.com

## காட்சி 1

(ஒரு பழைய காலத்து வீட்டின் நடுக்கூடம். வரதராஜன் ஊஞ்சலில் சப்பணம் போட்டுக்கொண்டு சௌகரியமாக உட்கார்ந்து அன்றைய பேப்பரைப் படித்துக் கொண்டிருக்கிறார். அப்போது அவருடைய புதல்வி கல்யாணி உள்ளே வருகிறாள். அவள் அலுவலகத்துக்குக் கிளம்பும் உடையில் புதுசாக இருக்கிறாள். வரதராஜன் பனியன், வேட்டியுடன் சுதாரித்த நிலையில் இருக்க அவருக்கு வயது ஐம்பத்தெட்டு இருக்கலாம். பெண்ணுக்கு இருபத்துமூன்று. அதிகம் அழகு என்று சொல்லமுடியாவிட்டாலும் அவள் பேச்சின் தரத்திலும் உள்ளடக்கத்திலும் பொதுவாக, அதிலுள்ள யோக்கியத்திலும் ஒரு வசீகரம் இருக்கத்தான் செய்கிறது. சுறுசுறுப்பான பெண். அப்பாவை நேசிப்பவள். அவருடன் அவளுக்கு எந்த சச்சரவும் இல்லை. எதிர்காலத்தில் நல்ல விஷயங்கள் நடக்கப் போவதை ஆவலுடன் நம்புவது அவள் பாவனைகளில் தெரிகிறது.

கல்யாணி : (டெலிபோனுக்கு அருகே செல்லும் போது) குட்மார்னிங் அப்பா!

வரதராஜன்: மார்னிங் டார்லிங்!

கல்யா: (டெலிபோனை எடுத்துக் காது கொடுத்துக் கேட்டு) என்ன வெறும் காத்தா இருக்கு?

வரத: அது எப்போ வேலை செஞ்சது. ஒரு தடவை சென்ட்ரல் ஸ்டேஷன் வரும். ஒரு தடவை அப்துல்ரகுமான் இருக்காரானு கேக்கும்.

கல்யா: இல்லேப்பா, டோட்டலா ‘டெட்’டா இருக்கு. கனெக்ஷன் பிடுங்கி விட்டாப்ல. (யோசித்து அவரை நேராகப் பார்த்து) அப்பா, உங்ககிட்ட டெலிபோன் பில் கட்டறத்துக்கு முந்நூற்றைம்பது ரூபா கொடுத்தேனே… போஸ்ட் ஆபீஸ் போய் கட்டினீங்களா?

வரத : (யோசித்து) கட்டலை போலிருக்கு. ஏன், லாஸ்ட் டேட் ஆயிடுச்சா?

கல்யா: (அலுத்துக் கொண்டு) சரிதான். அதான் வெட்டியிருக்காங்க. வழக்கமா போன் பண்ணிட்டு வெட்டுவாங்களே!

வரத: ஆமாம்… போன் பண்ணினதாத்தான் ஞாபகம். அப்பல்லாம் போன் நல்லா வொர்க் பண்ணும்… இந்த மாதிரி ‘லாஸ்ட் டேட்’ ஆயிடுச்சு, வெட்டப் போறோம்னு சொல்றப்ப…